REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 13உ வியாழன் (27—6—57) ★ ★ வெளியீடு: ஆனி 14உ வெள்ளி (28—6—57) [இதழ் 11

ரூ. 4,50,00,000 செலவில் வடக்கில் மேலும் ஒரு பால் பண்ணையாம்!

இந்தியப் பேரரசு 'உதவி' தருமாம்!

பம்பாய் மாநிலத்தில் ஆரேயில் ஒரு பால் பண்ணை இருக்கிறது; இங்கு தினசரி 4,200 மணங்கு பால் விநியோகம் செய்யப்படுகிறதாம்; 15 இலட்சம் பேர் இந்தத் திட்டத்தினால் பயனடைகிறார்கள்!

இப்போது, ரூ. 4½ கோடி செலவில் இரண்டாவது பால் பண்ணையை ஆரம்பிக்க பம்பாய் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு மானியமும் கடனுதவியும் தருமாறு மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்டபோது, கொள்கையளவில் இந்தியப் பேரரசு இதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டதாம்.

'வெறுப்போரிடமும் அன்பு காட்டுங்கள்'

'எவரிடமும் விரோதம் கொள்ளாதீர்'

'தலை கீழ் அன்புதான் வெறுப்பு எனப்படுவது'

'நம்மோடு வரவேண்டிய மாற்றாரின் வெறுப்பு கண்டு வருந்தாதீர்'

கழகத் தோழர்களுக்கு அண்ணா அறிவுரை

24—6—57-ல், சென்னை—சிந்தாதிரிப்பேட்டை முனுசாமி நினைவு மன்றத் துவக்க விழாவில், அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் முதற்பகுதி; நேற்றைய இதழில் தரப்பட்டது; மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்களிடம் உள்ள தொடர்பு நாளும் வளர்ந்த வண்ணமுள்ளது. நாள் தவறாமல் ஊர்தோறும் கழகத் தோழர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 'ஏன் இவர்கள் இபபோது இப்படிப் பேசவேண்டும்? பேசவேண்டிய தேர்தல் காலம்தான் முடிந்துவிட்டதே! இதென்ன பைத்தியக்காரத்தனமான நடவடிக்கை,' என்று கடமை உணர்ச்சியோடு பணியாற்றும் காமராசர்கள் கேட்கக்கூடும்! ஆனால் அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் ஈடுபட்டு 17 இலட்சம் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றான பிறகும், நாள்தோறும் மக்களைச் சந்தித்து அரசியல் நிலைகளை விளக்கிக்கொண்டிருப்பது கண்டு கவலைப்படும் வேறு தலைவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த தலைவர்களின் கவலை எல்லாம், 'தி. மு. கழகம் வளர வளர காங்கிரஸ் கரைந்துபோகுமே' என்ற நிலைமைதான்!

"நாம் மக்களிடை அரசியல் கருத்துக்களை எடுத்துக் கூறுவது போல் காங்கிரசாரும், மந்திரிமார்களும் தங்கள் கருத்துக்களைக் கூறுவார்களேயானால், மக்களுக்கு அரசியலில் அக்கறை ஏற்படும்; அதன் விளைவாக, எவருடைய கருத்துக்கள் நியாயமானவை என்ற தெளிவு பிறக்கும்.

"நாம் தினந்தோறும் மக்களைச் சந்திக்கிறோம்; அவர்களும் நமது கூட்டங்களுக்குத் தவறாமல் வருகிறார்கள்; இதன் உண்மையான பொருள் என்ன?

தி. மு. கழகத்தின் கருத்துகள், மீண்டும் மீண்டும் வந்து கேட்குமாறு மக்களைத் தூண்டுகின்றன; மக்களும், மீண்டும் மீண்டும் வந்து கேட்கிறார்கள்.

"தனது குழந்தை தன்னை 'அப்பா' இன்று கூப்பிடத் துவங்கியது கேட்ட தந்தை, மகிழ்கிறான்; அவரது மகிழ்ச்சிக்கோ அளவில்லை; பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்து வந்து, 'என் பிள்ளை என்னை, 'அப்பா' என்று கூப்பிடுகிறான், கேள்' என்று கூறுகிறான். பிள்ளையிடம், 'அப்பா சொல்லு — அப்பா சொல்லு' என்று கேட்கிறான். குழந்தையும், தத்தித் தத்தி 'அப்பா'—என்கிறது; தந்தை மகிழ்கிறான்; திரும்பத் திரும்ப குழந்தை, 'அப்பா' என்று சொல்லக்கேட்டு மகிழ்கிறான்.

"அதுபோலத்தான் இன்று, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று திராவிட முன்னேற்றக் கழகம் திரும்பத் திரும்பக் கூறுவதைக் கேட்டு நாட்டு மக்கள் மகிழ்கின்றனர். கேட்டவர்கள், மீண்டும் மீண்டும் கேட்க விரும்புகின்றனர்; கேட்காதவர்களையும் அழைத்துவந்து, கேட்கச் செய்து மகிழ்கின்றனர்.

"'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற மழலை மொழியை, தினம் தவறாமல் நாடு கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

"நாம் எழுப்பும் இந்தக் குரல் கண்டு சிலர் வருத்தப்படுகிறார்கள்; சிலர் கோபப்படுகிறார்கள். ஆனால், நான் ஆராய்ந்து பார்த்த வரையில், காங்கிரசில் உள்ளவர்களும் சரி—அரசியல் பற்றற்றவர்களும் சரி, தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை மறுப்பவர்கள் இல்லை. அவர்கள் எல்லாம், 'ஆதிக்கம் இருக்கத்தான் செய்கிறது,' என்று கூறிவிட்டு, 'ஆனால்......' என்று இழுக்கிறார்கள்!

"அந்த 'ஆனால்' படிப்படியாக, 'அப்படியானால்' என்று மாறி, 'அது சரி' என்று வளர்ந்து, 'இனி என்ன செய்யலாம்' என்று மேலும் வளர்ந்து, 'உன்னால் முடியுமா?' என்று கேட்டு, 'நான் முயற்சிக்கிறேன்' என்று பேசி, 'நாம் இருவருமே சேரலாம்' என்று உருவாகி, 'இதோ, திராவிட நாடு' என்ற நிலை பிறந்தாக வேண்டும். இந்த நிலை பிறக்கும் என்ற நம்பிக்கைதான், நாம், மாற்றாரும் மற்றவரும் நம்மீது வீசும் பழிச் சொற்களை எல்லாம் தாங்கிக் கொள்வதற்குக் காரணம்.

"இன்று நம்மீது வெறுப்பு காட்டுகிறவர்கள் நம்மிடம் வர வேண்டியவர்கள்; அவர்கள் நம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

"'6 மணிக்கு வருகிறேன் என்றாள்; இன்னும் வரக்காணோமே' என்று பூங்காவில் காத்திருக்கும் காதலன், ஏழுமணி—எட்டுமணி ஆனாலும், நம்பிக்கையைவிடமாட்டான். 'இன்று ஏதோ அசந்தர்ப்பம் போலும்; நாளை கட்டாயம் வருவாள்' என்று எண்ணிக்கொள்வான். இப்படிக் காத்திருக்கிற எந்தக் காதலனும், பொதுவாக ஏமாற்றம் அடைவதில்லை. அதுபோலத்தான் நாமும், இன்று 'ஆனால்' என்று இழுக்கிறவர்கள் எல்லாம் இன்றில்லாவிட்டால் நாளை—நாளை இல்லாவிடின் மற்றொரு நாள் வருவார்கள் என்று நம்புகிறோம்; கைக்கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம்.

"நமது இந்த நம்பிக்கைக்குக் காரணம், நாம் கூறிவரும் உண்மை. பலரது நெஞ்சத்தையும் தடவ ஆரம்பித்திருக்கின்றன என்பதுதான்.

"இந்த நேரத்தில், கழகத் தோழர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன்.

"நம்மிடத்தில், இந்தக் கட்டத்தில் இரண்டு சுபாவங்கள் கட்டாயமாக இருந்தாகவேண்டும்.

"ஒன்று—எவரிடத்திலும் நமக்கு விரோதம் கூடாது. மற்றொன்று—நம்மீது வெறுப்புக் காட்டுகிறவர்களிடம்கூட கழகத் தோழர்கள் அன்பு காட்டவேண்டும்.

"நான் ஏதோ, 'காந்தீயம்' போதிப்பதாகக் கருதவேண்டாம்.

"வெறுப்பு என்பது என்ன? தலைகீழான அன்பைத்தான், 'வெறுப்பு' என்று கூறுகிறார்கள். நம்மீது வெறுப்புக் காட்டுகிறார்களே, அவர்கள், அப்படி வெறுப்பதற்குக் காரணம் எல்லாம், நாம் அவர்களிடம் இல்லையே என்பதைத் தவிர, வேறென்ன காரணத்தால், வெறுப்புக் காட்டுகிறார்கள்?

"நம்மை வெறுப்பதின் மூலம் அவர்கள் தங்கள் மனதிற்கு சாந்தி தேடிக்கொள்கிறார்கள் அவ்வளவுதான்.

"அதனால்தான், 'நமது கழகத் தோழர்கள், எந்தக் கட்சிக்காரரிடத்தும் விரோதம் காட்டக்கூடாது' வெறுப்பவர்மீதும் அன்பு காட்ட வேண்டும்' என்கிறேன்.

"ஏனெனில், எப்படியோ, நாம் சாமானியர்களாயிருப்பினும், நாம் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் ஒரு நாட்டை மீட்கின்ற மிகப் பெரிய காரியம்.

"எனவே, இந்தப் பெரிய காரியம், நமக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய பிரச்சினை அல்ல; மாறாக, நமக்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கிற தொடர்பு பற்றியது.

"எனவே, கழகத் தோழர்கள் இந்தஉண்மையைத் தெரிந்து கொண்டாக வேண்டும்"

புதிய வார்த்தைகளுடன் ஒரு ரூபாய் நோட்டுகள்!

புதுடில்லி, ஜூன் 26—

இனி வெளியிடப்படும் ஒரு ரூபாய் நோட்டுகளில் 'பிரதம காரியதரிசி—நிதி இலாகா,' என்ற வார்த்தைகள் அச்சடிக்கப் பட்டிருக்கும் என்று நிதி இலாகா அறிக்கை கூறுகிறது.

பிரகாசம் மறைவுக்கு சென்னை சட்டசபை அனுதாபம்

நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன

சென்னை, ஜூன் 29—

சென்னை சட்டசபை, சபைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ் தலைமையில் இன்று காலை 11 மணிக்கு, கோட்டை சபை மண்டபத்தில் கூடியது.

நிதி மந்திரி சுப்பிரமணியம், காலஞ்சென்ற ஆந்திரத் தலைவர் பிரகாசம் அவர்களின் மறைவு குறித்த அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார், தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

தி. மு. கழகச் சார்பில் தோழர் க. அன்பழகன் அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் தோழர் என். கே. பழனிச்சாமியும் பேசினர்.

பின்னர் சபை, காலஞ்சென்ற பிரகாசத்தின் மறைவு குறித்து தனது வருத்தத்தையும், அவரிடம் தனக்குள்ள மரியாதையையும் தெரிவிக்கும் பொருட்டு சபை நடவடிக்கைகள் பகல் 2-30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

உத்தேச எண்ணெய் சுத்திகரிப்புதொழிற்சாலை

மேற்கு வங்கத்தில் நிறுவப்பட வேண்டுமென கோரிக்கை

மாநில சர்க்கார் வாயை மூடிக் கொண்டிருப்பதாகக் கம்யூனிஸ்டு குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 25—

உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை மேற்கு வங்கத்தில் நிறுவுமாறு டெல்லி சர்க்காரை வற்புறுத்தும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக முதன் மந்திரி பி. சி. ராய் தெரிவித்திருக்கிறார்.

"இந்தப் பிரச்சினையில் பீகாரும், அசாமும் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும்போது, மேற்கு வங்க சர்க்கார் வாயை மூடிக் கொண்டிருக்கிறது"

என்று பங்கிம் முகர்ஜி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே முதன் மந்திரி, மேற்கண்டவாறு பதில் கூறினாராம்.

நல்ல சூழ்நிலை உருவாகிறதாம்!

லண்டன், ஜூன் 26—

அணு ஆயுதச் சோதனைகள் சம்பந்தமாக மேற்கு நாடுகளுக்கிடையே ஒரு நல்ல சூழ்நிலை உருவாகி வருகிறது. இத்தகைய அணு சோதனைகளை உடனே நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே ஒரு உடன்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சியின் நடைமுறை?

ஜபல்பூர், ஜூன் 25—

ஜபல்பூரில் வரும் 29-ந்தேதியன்று ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரிக்கும் அபேட்சகர் ஒருவர் ஊரை விட்டே இன்னும் 30 நாட்களுக்குள் வெளியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

அவர் பாகிஸ்தான் குடிமகன் என்றும், அவருக்குள்ள 'விசா' அனுமதி காலம் முடிந்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

'அறைகூவலை' ஏற்றுக் கொள்ளத் தயாராம்!

கிராம அதிகாரிகள் முடிவு பற்றி ஆந்திர சர்க்கார்

ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த சில தாலுகாக்களின் கிராம அதிகாரிகள், தங்களின் குறைபாடுகள் காரணமாக வேலையிலிருந்து விலகிவிடவோ, அல்லது 'ஜமாபந்தி' வேலைகளில் கலந்து கொள்ளாமல் இருக்கப்போவதாகவோ அரசாங்கத்தை அச்சுறுத்தியிருந்தனர்.

அவ்வாறு அவர்கள் வேலையிலிருந்து விலகிக்கொள்வதானால் அம்முடிவை ஏற்றுக்கொள்வதெனவும், 'ஜமாபந்தி' வேலைகளில் கலந்துகொள்ளாத கிராம அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கிவிடுவதெனவும் ஆந்திர சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—6—57 வியாழன்

காங்கிரசு வழி!

தென்னாட்டு மக்களின் மூல உணவுப்பொருள் அரிசியாகும். மற்ற எல்லா உணவுப் பண்டங்களைப் போலவே, மூலஉணவுப் பண்டமான அரிசியும் சில ஆண்டுகளாக, விலையில் கூடுவதும் குறைவதுமாக இருந்து வருகிறது.

விலை குறைவாக விற்கப்படும் காலத்திலும்கூட, அவ்விலையைக் கொடுத்து அரிசியை வயிறு நிறைய வாங்கி உண்ணுவதற்கு இயலாத நிலையில் இங்கு பல இலட்சக்கணக்கான மக்கள் இருந்து வருகின்றனர். அத்தகையவர்களுடைய நிலை, அரிசியின் விலைவரை கடந்து விற்கப்பட்டுவரும் இந்த நேரத்தில், மிகமிக மோசமாகத்தான் இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

அரிசியின் விலை குறைவாக இருக்கிறது எனக் கூறப்படுவதெல்லாம் இன்றைய ஏறிய விலையைக் கணக்கிட்டுக் கூறப்படுவதேயாகும். அவ்வாறு கணக்கிட்டு அரிசி உள்ளிட்ட உணவுப்பண்டங்களின் விலையைக் குறைவு, கூடுதல் எனக் குறிப்பிடுவதே அடிப்படையில் தவறுடையதாகும்.

பல இலட்சக்கணக்கான மக்கள், தங்கள் மூல உணவுப் பொருளான அரிசியை வயிறு நிரம்ப வாங்கி உண்ண முடியாத பரிதாப நிலையில் உள்ளனர் என்பது மிகைபடக் கூறியதன்று. இவ்வுண்மையை, காங்கிரசு ஆளவந்தார்கள் நம்மை விட நன்கு அறிந்திருக்கின்றனர்.

வேலையற்று அலைந்து திரிபவர்களும், அரைகுறை வேலை செய்துவருபவர்களும், முழுநேர வேலை பெற்று, வயிறு நிரம்ப உண்ண முற்படுவார்களேயானால், இன்று விற்கப்பட்டுவருவதைவிட அரிசியின் விலை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு உயர்ந்துவிடக்கூடும் என்பது ஒரு பக்கம் இருக்க, காட்சிப் பொருளாக அரிசியைக் காண்பதும்கூட அரிதாகிவிட்டாலும் காங்கிரசு ஆட்சியில் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியப் பேரரசு உருவாக்கி நிறைவேற்றப்பட்டுள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்குத்தான் சிறப்பளிக்கப்பட்டிருந்தது. இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் கரைக்கப்பட்டும்விட்டது. ஆனால் உணவுப் பெருக்கமோ ஏட்டளவு புள்ளிவிவரங்களுடன் நின்றுவிட்டது.

உணவு அமைச்சர், உணவு உற்பத்தி கூடி இருக்கிறது என்று ஒரே ஏட்டிலிருந்து புள்ளிவிவரம் காட்டுகின்றார். அதை மறுக்கும் வகையில், அதே ஏட்டிலிருந்து புள்ளிவிவரம் காட்டி உணவு உற்பத்தி தேய்ந்துவிட்டது என்று திட்டக் குழுத் தலைவர் முகாரி பாடுகிறார். இவ்விருவரும் செய்துகாட்டும் அரசியல் கண்கட்டு வித்தை கண்டு, நம் போன்றவர்கள் திகைக்கவேண்டியதாகிறது.

இந்த நடைமுறை இவ்வாறு இருக்க, அரிசி விலை விஷுடிக்கு விஷுடி ஏறிவருவதையும், கூடிய விலை கொடுத்து அரிசியை வாங்கி முழு அளவு உண்ணமுடியாதநிலையில் ஏராளமான மக்கள் கிடந்து உழலுவதையும், குறைவான விலைக்குக் கிடைத்த நேரத்தில் அரை வயிறு கால் வயிறு உண்டு வந்தவர்களும் இப்பொழுது அந்த அளவும் உண்ண முடியாது திண்டாடித் தவிப்பதையும், நாட்டில் கண்டு வருகின்றோம். காங்கிரசு ஆளவந்தார்களும் இவ்வலங்கோலத்தைக் கண்டுதான் வருகின்றனர்.

மக்களின் உணவுக்கு வழி தேட வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் உண்டு. அப்பொறுப்பும் கடமையும் காங்கிரசு ஆட்சிக்கும் பொதுவாகும்.

அப்பொறுப்பையும் கடமையையும் காங்கிரசு ஆட்சியினர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. உணர்ந்திருப்பவர்களாக இருக்கும்பட்சத்தில், கடந்த பத்தாண்டுக் காலத்தை, இப்பிரச்சினை குறித்துப் பேசிவருவதிலேயே காங்கிரசு ஆளவந்தார்கள் கடத்தி வந்திருக்கமாட்டார்கள். இன்றும்கூட அவர்கள் அதைத்தான் செய்துவருகின்றனர்.

அறுவடைக்கு முன்னும் பின்னும் சில நாட்கள்வரை உணவு உற்பத்தி பெருகிவிட்டது—உணவுப் பிரச்சினை இனி எழுவதற்கே இடமில்லை—என்று வீரம் பேசுகின்றனர் ஆளவந்தார்கள். அவ்வாறு பேசப்பட்ட சிலநாட்களுக்கெல்லாம் உணவுப் பொருட்களின் விலை தினம்தினம் கூடிக் கொண்டே போவதைக் கண்டதும், 'கையிருப்பில் இலட்சக்கணக்கான டன் உணவு பண்டம் இருக்கிறது—உணவுத் துறையில் எந்தவித நெருக்கடி ஏற்படுவதற்கும் இடம் கிடையாது—அப்படி ஏற்பட்டாலும் கூட அதை வெற்றிகரமாக எதிர்த்து முறியடிக்க அரசாங்கத்தால் முடியும்—என்று காங்கிரசு ஆளவந்தார்கள், தங்களுக்குத் தாங்களே ஆறுதல் கூறிக்கொள்ளுகின்றனர்.

அதன் பின்னர், உணவுப் பங்கிடு கொண்டுவர வேண்டும் என்று சிலரும், அது கூடாது நியாய விலைக் கடைகளைத் திறந்தால் நிலைமையை சமாளித்துவிட முடியும் என்று சிலரும், தேவையான அளவு உணவுப் பொருளை இறக்குமதி செய்யத்தான் வேண்டும் என்று சிலரும், நாள் தவறாமல் பேசிக்கொண்டே, உணவு பற்றாக்குறைக்கு வெற்றிகரமாகப் பரிகாரம் தேடிவருகின்றனர், இப்பத்தாண்டுக் காலமாக நமது காங்கிரசு ஆளவந்தார்கள். இம்முறையை காங்கிரசு வழி என்றுதான் கூறவேண்டும். இக்காங்கிரசு வழியை நாட்டு மக்களும் இதுவரை தாங்கிக்கொண்டுதான் வந்திருக்கின்றனர்!

முன்னிலும் அதிகமாக மக்கள் உண்ணத் தொடங்கிவிட்டனர் என்று சிலரும், ஏற்கனவே கால் வயிறு, அரை வயிறு உண்டு வந்தவர்கள் எல்லாம் இன்று முழு வயிறு உண்ணத் தொடங்கிவிட்டனர் என்று சிலரும், காங்கிரசு ஆளவந்தார்களில் பேசி வருகின்றனர். இவ்வாறு பிரச்சினைக்குப் பரிகாரம் கூறிவருவதும் காங்கிரசு வழிதான். இவ்வாறு பேசப்பட்டு வருவதையும் நாட்டு மக்கள் கேட்டுக் கொண்டுதான் உள்ளனர். எரிமலை எச்சரித்து விட்டு தீக்குழம்பை உமிழ்வதில்லை என்ற படிப்பினையை நாடாளுகின்றவர்கள் மறந்துள்ளது அரசியல் விந்தைதான்.

'பேச்சு சுதந்திரம் வழங்கியதாகக் கூறுபவர்கள் குறிப்பெடுப்பவரை அனுப்புவதேன்?'

'கி. உ.-க்கள் நிலையை உயர்த்த சட்டமன்றத்தில் போராடுவோம்'

'வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் புதுமை மலர வேண்டும்'

கழக நிகழ்ச்சிகளில் அண்ணு கருத்துரை

திருக்கழுக்குன்றம், ஜூன் 27—

13—6—57 அன்று மாலை, தேசுமுகப்பேட்டை தி.மு. கழகக் கட்டிடத் திறப்பு விழாவும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஊர்த் தெருக்கள் ஆங்காங்கே தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அண்ணு அவர்களை ஊர்வலமாகப் பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். வழிநெடுகிலும் இல்லங்களில், அண்ணுவுக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

காஞ்சி நகர மன்றத் தலைவர் திரு. அ. க. தங்கவேலர் விழாவிற்குத் தலைமை தாங்கினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள், நாட்டு நடப்புகளையும், சட்டமன்ற நடவடிக்கைகளையும் விளக்கியதுடன், சர்க்காரின் ஆகாத செயல்களைக் கண்டித்துப் பேசினர்.

அடுத்து தோழர் சி. வி. இராசகோபால் அவர்கள், தேர்தலுக்கு முன் காங்கிரஸ்காரர்கள் சொன்னதை பின்னர் செய்யவில்லை என்று குறிப்பிட்டுப் பேசினர்.

பின்னர் இராசாபாதர் அவர்கள் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து தோழர் மா.கி. தசரதன் அவர்கள், தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் காங்கிரஸ்காரர்கள் செய்த துரோகத்தையும், ஆட்சியில் இல்லாமலே தி. மு. கழகம் செய்த தொண்டுகளையும் எடுத்துரைத்தார்.

இறுதியாக அண்ணு அவர்கள் கூடியிருந்தோரின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே பேச எழுந்தார்; பல மன்றங்களின் ஆதரவிலும், தனிப்பட்டவர்களாலும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

கழகக் கொள்கைகளையும், நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையையும் விளக்கி அண்ணு அவர்கள் அரியதோர் உரையாற்றினர்.

அவர் குறிப்பிட்டதாவது :—

"காங்கிரஸ்காரர்கள், இந்த நாட்டுக்குப் பேச்சு சுதந்திரம் தந்தோம் என்று சொல்லுகின்றார்கள்; இதோ, இங்கே, சர்க்கார் 'ஒற்றர்' குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார். ஏன்? நாங்கள் எங்கே தவறுவோம்—சட்டத்தை எப்படிக் கையாண்டு எங்களைத் தண்டிக்கலாம் என்ற அளவில்தான் குறிப்பெடுக்கச் சொல்லுகின்றார்கள்.

"சில மாமியார்கள் மகனும் மருமகளும் அறையில் படுத்துக் கொண்டிருக்கும்போது வாயிற்படியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டிருப்பார்கள்—'எங்கே தன் மகன் மனைவியின் பேச்சைக்கேட்டு விடுகின்றானே,' என்று!

அதைப்போல இங்கே, நீங்களும் நானும் சந்திக்கின்ற போது வாயிற்படியிலே ஒற்றரை உட்காரவைக்கிறார்கள்.

"இதை வெள்ளைக்காரன் செய்ததிலே ஒரு வேளை அர்த்தமிருக்கக்கூடும்; அவன் வெளிநாட்டான்—அன்னியன். ஆனால் இவர்கள் ஆட்சியில் ஏன் இந்த நிலை?"

மேலும் அண்ணு அவர்கள், திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டியதற்கான பல காரணங்களை எடுத்துக்காட்டி, தமிழர்—திராவிடர் முன்னேற வேண்டுமானால் அதற்கு வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடமிருந்து விடுதலை பெற்று—உரிமையுடைய நாடு பெற்றாக வேண்டும் என்று கூறினர்.

'அரக்கு மாளிகை' நாடகம்

அன்று இரவு 11 மணிக்கு, தோழர் மா. கி. தசரதன் தலைமையில் கழகத் தோழர்களால் 'அரக்கு மாளிகை' நாடகம் நடிக்கப்பட்டது.

தோழர் மா. கி. தசரதன் தலைமை உரை ஆற்றுகையில் நாடகத்தினால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்காட்டி, நாடகத் துறையில் அண்ணு அவர்கள் புதுமை ஏற்படுத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் செங்கை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தி. ந. சம்பந்தம் அவர்கள் உடனிருந்து ஏற்பாடுகளைக் கவனித்துச் சிறப்புற நடக்க உதவி செய்தார்.

★

கிராம அதிகாரிகள் கூட்டத்தில் அண்ணு

மதுராந்தகம், ஜூன் 26—

19—6—57 மாலை 6 மணிக்கு, தாலுகா அலுவலகத் திடலில், திரு. வி. ஏ. எத்திராசன் தலைமையில் தமிழ் நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க மதுராந்தகம் தாலுகா கிளையின் ஆதரவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தாலுகாவின் பல பகுதிகளைச் சேர்ந்த சிற்றூர்களினின்றும், கி. உ.-க்களும், பொதுமக்களும் திரண்டு வந்திருந்தனர்.

கி. உ.-க்களின் நிலையை விளக்கியும், அவர்களுடைய குறைகளைப் பற்றியும், பி. இராமசாமி (ஐயர்) அவர்கள் பேசினர்.

அடுத்து, பாண்டுரங்க (நாயுடு) அவர்கள் கி. உ.-க்களின் குறைகளை அரசாங்கம் உடனடியாக நிவர்த்திக்க வேண்டுவதின் அவசியத்தை வலியுறுத்தினர்.

அடுத்துப் பேசிய எல்லப்பன் எம். எல். ஏ. அவர்கள், கி. உ.-க்களின் நிலையை உயர்த்துவதில் தன்னாலான முயற்சிகளைச் செய்வதாக வாக்களித்து, 'தொகுதிக்குப் பாடுபடுவேன்' என்றும் வாக்களித்தார்.

பின்னர் என். வி. நடராசன் அவர்கள், 'கி. உ.-க்கள் இன்று கால்நடைகளினும் கீழான நிலையில் சர்க்காரால் எண்ணப்படுகின்றனர்; இந்த அவலநிலை அகலவேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

இறுதியாக அண்ணு அவர்கள், மக்களின் போர்வத்திற்கிடையே பேச எழுந்தார்; பலர் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன.

கி. உ.-க்களின் நிலைமை உண்மையில் பரிதாபகரமானது என்றும், அவர்கள் வாழ்வில் உள்ள அல்லல் நீக்கப்பட்டால்தான் அவர்கள் ஆர்வமுடன் பணியாற்ற இயலும்" என்றும் அண்ணு அவர்கள் ஆர்வமுடன் குறிப்பிட்டார்.

"இந்தத் தடவை சட்டசபைக் கூட்டம் நடைபெறும்போது கி. உ.-க்களின் நிலையை நாங்கள் அங்கே எடுத்துச் சொல்லிப் போராடுவோம்; அப்போது உங்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் சென்னையில் இருந்தால் அவ்வப்போது வேண்டிய தகவல்களை அவர் எங்களுக்குத் தந்துதவலாம். அப்படி வந்திருப்பவருக்கான செலவுத் தொகையை எங்கள் கழக சட்டமன்ற உறுப்பினர்களேகூட ஏற்றுக் கொள்ளக்கூடும்"

என்று அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்.

சங்கத்தின் சார்பில் திரு. எஸ். டி. கன்னிசாமி அவர்கள் அண்ணுவுக்கு ஓர் வரவேற்பிதழ் படித்துத் தந்தார்.

★

உழைப்பாளி விவசாயி வாழ்க்கை உயர்வுக்கு பாடுபடுவது தி. மு. க.

பாஞ்சரை, ஜூன் 26—

வந்தவாசி வட்டம் பாஞ்சரை கிராமத்தில் தி. மு. கழகத் துவக்க விழா 21—6—57 மாலை 6 மணிக்கு சிறப்புற நடைபெற்றது ஊர் மன்றத் தலைவர் திரு. ஆர். பொன்னுசாமி அவர்கள் தலைமை தாங்கினர்.

மருதாடு தோழர் தரும கவுண்டர் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்.

தோழர் வெங்கிடாசலம் அவர்கள் திரு. வி. க. படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினர்,

தோழர் மா. கி. தசரதன் அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

அண்ணு அவர்கள் மாலை 6 மணிக்கு இங்கு வந்ததும் இயக்கத் தோழர்கள் கழகக் கொடியுடனும் இசை முழக்கத்துடனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

கழகத் தோழர்களின் முயற்சியால் கட்டப்பட்ட திரு. வி. க. மன்றத்தை அண்ணு அவர்கள் திறந்து வைத்தார்.

கூட்டத்தில் அண்ணுவுக்கு தேசூர், அருந்தோடு, பொன்னூர், குண்ணகம்பூண்டி, வந்தவாசி ஆகிய கழகங்களின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன; அன்னமங்கலம் கழகத் தோழர்கள் இரண்டு பெரிய மாம்பழங்களை அளித்தனர்.

அண்ணு அவர்கள் பேசுகையில் 'உழைப்பவர் முன்னேற்றத்திற்கும், விவசாயிகளின் வாழ்க்கை உயர்விற்கும் பாடுபடுவதே தி.மு.க. இலட்சியம் என்றும், நாட்டுக்கு நாட்டுக்கு நல்வாழ்வு கிடைக்க வடவர் பிடியிலிருந்து நாம் விடுபடவேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

கொட்டும் மழையிலும் அண்ணு அவர்கள் சொற்பொழிவை மக்கள் ஆர்வத்துடன் கேட்டு கருத்து விளக்கம் பெற்றனர்.

தோழர் ஆறுமுகம் நன்றிகூற விழா 10 மணிக்கு இனிது முடிந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

பொலிவுடன் அமையும் புதிய கழகங்கள்

மு. கருணாநிதி சுற்றுப்பயண நிகழ்ச்சி

18—6—57 மாலை 6-மணிக்கு நாகை-கிவளூருக்கு அடுத்த அத்திப்புலியூர் கிராமத்தில், தி. மு. கழகத் துவக்கவிழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது. ஊரெங்கும் வரவேற்புத் தட்டிகளும், வாழ்த்து முழக்கங்களும் நிறைந்து அழகுற அமைக்கப்பட்ட மேடையில் கழகத்தின் துவக்கவிழாவை தோழர் மு. கருணாநிதி நடத்தி வைத்தார்.

விழாவுக்கு ஆரூர் டாக்டர் விசயராகவன் தலைமை வகித்தார்.

தோழர்கள் அம்பில்-தர்மலிங்கம், நாகை-பாண்டியன், கோகூர் செயலாளர் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மாலை 5-மணிக்கு கழகத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தையும் மு. கருணாநிதி திறந்துவைத்து, கழக நண்பர்களின் திறமையையும், ஆர்வத்தையும் பாராட்டினார்.

கூட்டம் சிறப்புற அமையாமல் தடுக்க மாற்றுக்கட்சி நண்பர்கள் எடுத்த முயற்சிகள் தோல்விகண்டன.

கூட்டத்திற்கு செல்லகூடாதென கட்டுப்பாடு விதிக்கப்பட்ட ஆதி திராவிடப் பெருமக்கள் தொலைவில் இருந்து ஒலிபெருக்கி மூலமாகப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இரவு நடைபெற்ற 'ஒரே முத்தம்' நாடகத்திற்கும் பெருவாரியான மக்களும், சிறப்பாக தாழ்த்தப்பட்ட தோழர்களும் கூடியிருந்தனர்.

திருவாரூர் :

19—6—57 மாலை திருவாரூர் வள்ளுவர் படிப்பக நாலாம் ஆண்டு விழா பண்டிதர் சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புத்தரின் படத்தை அன்பில் தர்மலிங்கம் திறந்துவைத்தார்.

பின்னர், 'குறளோவியம்' என்ற தலைப்பில் தோழர் மு. கருணாநிதி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். குறளுக்கு உரைகண்டவர்கள் யார் யார் தங்கள் கருத்துக்குக் குறளை இழுத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை விளக்கியதோடு, எல்லாப் புலவர்களும், நாட்டுத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து திருக்குறளைக் கொண்டே திருவள்ளுவரின் உருவத்தை கற்பனை செய்து படைக்க வேண்டுமென்றும், அந்த ஒரு நிலை ஏற்படும் வரையில் திருக்குறளேதான் திருவள்ளுவர் உருவம் என்றும் குறிப்பிட்டார். இரவு 'குற்றவாளி' என்ற நாடகமும் நடைபெற்றது. விழாவில் பெருவாரியான மக்கள் கலந்துகொண்டனர்.

செட்டிகுளம் :

20—6—57-ல், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த செட்டி குளத்தில் தி. மு. கழகத் துவக்க விழா சீரும் சிறப்போடு கொண்டாடப்பட்டது. பல இடங்களில் கொடியேற்று விழாக்கள்; ஊரெங்கும் வளைவுத் தட்டிகள்—தோரணங்கள்—விளக்கு வரிசைகள்—அழகுற அமைந்த எடுப்பான மேடை; திறந்த காரில் ஊர்வலம்; ஏராளமான தாய்மார்களும், தாழ்த்தப்பட்ட தோழர்களும், வெளியூர் உள்ளூர்த் தோழர்களும் கூடியிருந்தனர்.

துறையூர் செயலாளர் கலியபெருமாள் தலைமை வகித்தார்; தோழர்கள் அழகுமுத்து, அம்பில் தருமலிங்கம், இளங்கோவன், ஆதிமூலம் ஆகியோர் பேசியபின் தோழர் மு. கருணாநிதி கழகத்தைத் துவக்கி வைத்து நீண்டதொரு உரை நிகழ்த்தினார். பல மன்றங்களின் சார்பில் கைத்தறி ஆடைகள், மாலைகள் அணிவிக்கப் பெற்றது.

வீரவல்லி :

21—6—57ல் குளித்தலையைச் சேர்ந்த வீரவல்லி கிராமத்தில் நடைபெற்ற தோழர் சண்முகம்-தோழியர் அன்பாசி திருமணத்திற்கு தோழர் மு. கருணாநிதி தலைமை வகித்தார். தோழர்கள் சிவராஜ், முத்துகிருஷ்ணன், அம்பில்-தர்மலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆலம்பாக்கம் :

21—6—57 மாலை 6 மணிக்கு கல்லக்குடிக்கு அருகேயுள்ள ஆலம்பாக்கத்தில் தி. மு. கழகம் துவக்கப்பட்டது. தோழர் கல்லக்குடி மாணிக்கம் தலைமையில் தோழர்கள் மு. கருணாநிதி அம்பில்-தாமலிங்கம், தம்புசாமி கெ. கெ. சாமி, மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரின் எதேச்சாதிகாரம்

மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றம் கண்டனம்

சென்னை, ஜூன் 24—

திருச்சி மாவட்டம்—மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத்தார் கடந்த திங்கள் 25-ம் நாளன்று தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர் தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பளிக்கவும், அவ்விழாவிற்கு மாவட்ட மன்றத் துவக்கப் பள்ளி கட்டிடத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருந்தார்கள். ஆனால், திருச்சி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர், தான் ஆளும் கட்சியைச் சார்ந்தவர் என்ற வெறியில்—சனநாயகப் பண்புக்கு மாறாக, பயன்படுத்திக்கொள்ள ஊராட்சி மன்றத்திற்கு அனுமதி மறுத்துவிட்டார்.

14—6—57ல், நடைபெற்ற மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரின் போக்குகண்டு வருந்தியும், அவரது சர்வாதிகார செயலைக் கண்டித்தும், ஒருதலைபட்சமாக நடந்துகொள்ளும் நடைமுறைக்கு வருந்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மானப் பிரதிகளை தி. மு. கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணா அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார் அவர்களுக்கும், முதலமைச்சர் காமராசர், ஸ்தலஸ்தாபன அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன், மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் ஆகிய அனைவருக்கும், மற்றும் தின—வார பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (ந-நி.)

சென்னைக்குத் தண்ணீர் விநியோகம் அதிகரிப்பு

புதுடில்லி, ஜூன் 25—

அடுத்த நவம்பர் ஆரம்பத்திலிருந்து சென்னை நகரின் தண்ணீர் விநியோகத்தை அதிகரிப்பதற்கான இயந்திர வடிகட்டி வேலை துவங்கும் என்றும் 30,000 காலனிலிருந்து 40,000 காலன் தண்ணீர் கிடைப்பதற்கு வசதி செய்யப்படும் என்றும், சென்னை நகரசபை மேயர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

கழகச் செய்திகள்

பந்தநல்லூர் :

24—5—57 மாலை, பந்தநல்லூர் தி. மு. க. மூன்றாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் பி. ஏ. லிங்கன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நா. செல்வதுரை, இராலமயன், செல்வரத்தினம், கருப்பூர்—நாராயணசாமி, காளிதாஸ், ம. கோ. மணி ஆகியோர் புதிய வரிகளைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர்.

செக்காபட்டி ;

24—5—57 மாலை 4 மணிக்கு இவ்வூரில் தி. மு. கழகக் கிளைக் கழகம் அமைக்கப்பட்டது. கழகக் காரியாலயத்தையும், அண்ணா அவர்களின் உருவப் படத்தையும் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் திறந்துவைத்தார்; பின்னர் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாலை 4-30 மணிக்கு இவ்வூர் பழைய பள்ளி முன்னிலையில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் கே. எஸ். சந்தானம் தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றினார்.

இக்கிளைக் கழகத்திற்கு க. இராமலிங்கம் செயலாளராகவும், க. காளியப்பன் துணைச்செயலாளராகவும்; எம். எஸ். முத்து பொருளாளராகவும்; பி. எம். சுந்தரம் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கும்மிடிபூண்டி :

22—5—57 மாலை 5½ மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகச் சார்பில் வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பாராட்டியும் துணைச்செயலாளர் ச. சி. புவியரசு அவர்கள் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும் முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

உதயமார்த்தாண்டபுரம்:

26—5—57 மாலை தோழர் நாடிமுத்து கடையில், தோழர் சாமித்துரை தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் மாதாந்திரக் கூட்டத்தில், செயலாளரின் விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டும், தோழர் வே. சு. மி. வேம்பையாவைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இலைக்கடம்பூர் :

25—5—57 இரவு 7 மணிக்கு, இலைக்கடம்பூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் இரா. நாராயணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. முத்துசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் சதாசிவம் கழகக் கொடியேற்றினார். தோழர்கள் இராமலிங்கம், இராகவன் ஆகியோர் சிறிதுநேரம் பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார். கூட்ட இறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செருகம்பூர் :

23—5—57 அன்று இரவு 8 மணியளவில், கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ம. சோ. மணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, செயலாளராக தோழர் ரெ. ராமையனும்; துணைச்செயலாளராக தோழர் கணேசனும்; மாவட்டப் பிரதிநிதியாக தோழர் கோ. அய்யாத்துரையும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கழகம் இயங்கவேண்டிய முறைபற்றி தோழர் ம. கோ. மணிவிளக்கிப் பேசினார்.

சேதுபாவாசத்திரம் :

26-5-57-ல், பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த மேற்படி ஊரில் தோழர் வி. அருணாசலம் தலைமையில் தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில். 40 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். பின்னர், தோழர்கள் சு. துரைமாணிக்கம், எம். எஸ். நைனுமுகமது, கே. முகமது அப்துல் ரகிமான், சி. ஆறுமுகம், எம்.எஸ். சேக் இஸ்மாயில் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், துணைப்பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர்கள் க. முனியப்பா, மு. கருப்பன், மு. சிதம்பரம், கா. அப்துல்மஜீது ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மன்னார்குடி :

26—5—57 இரவு 7 மணிக்கு, மன்னைதோடியில் தோழர் கே. பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றமை குறித்துப் பாராட்டுத் தெரிக்கப்பட்டது. மாலை 3 மணிக்கு தோழர் கருணாநிதி அவர்களை வரவேற்று ஊர்வலமும் நடைபெற்றது. பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர்மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் கருணாநிதி அவர்களைப் பாராட்டி தோழர்கள் கோ. செங்குட்டுவன், ப. நாராயணசாமி, இரா. கணேசன், கோ. சிவஞானம் ஆகியோர் பேசியபின், இறுதியில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

கீழவளவு :

24—5—57-ல், தோழர் ப. தங்க வேலர் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர்: எம். முத்தலீபு, துணைச்செயலாளர்: எஸ். சண்முகம்; பொருளாளர்: சி. கா. சை. அப்துல்காதர்; மாவட்டப் பிரதிநிதி: எ. கெ. செட்டி; செயற்குழு உறுப்பினர்கள் : வெள்ளவீரன், வீரசுந்தர், சையது முகமது, கே. எம். நல்லுச்சாமி, மகமது அலி, க. கருத்தபிச்சன், ச. காசி முகமது, நா. காசீன், ஜெயராமன், எம். எஸ். பாண்டியன், வீ. வீரணன்.

ஒருபந்தூர் :

27—5—57 மாலை 4 மணிக்கு நாமக்கல்லைச் சேர்ந்த மேற்படியூரில் தோழர் சு. ஆறுமுகம் தலைமையில் கிளைக் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: சு. வேலுசாமி; துணைச்செயலாளர்: க. வடிவேலன்; பொருளாளர்: சு. ரத்தினம்; மாவட்டப் பிரதிநிதி: ஆ. கிருட்டிணசாமி; மற்றும் 7 பேர் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அணைப்பாளையம்

17—5—57ல், தாரை வட்டம்-வேளாம்பூண்டி கிராமம் அணைப்பாளையத்தில், கன்னிவாடி - கே. எஸ். எஸ். பெரியார் தலைமையில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது; ஒசப்பாளையம் தோழர் இராமசாமி கொடியேற்றிவைத்தார். தோழர் சி. பி. சிற்றரசு துவக்க உரை நிகழ்த்தினார்.

பாண்டிக்குடி :

22—5—57 இரவு 7 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஆ. ரெங்கையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அறிவுடைநம்பி, இளந்திரயன், சுப்பிரமணியன் ஆகியோர் கழகக் கொள்கை பற்றி விரிவுரையாற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதம்

ஏன் இந்த அநீதி?

ஐயா,

மதுரை மாவட்ட ஆட்சி மன்ற நிர்வாகத்தின்கண்ணுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பி. டி. ஆசிரியர்களுக்கு ரூ.-75—5—145 என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் 5 வருட ஊதிய உயர்வைக் கூட்டி ரூ. 100 வேலைக்கு வந்த தினத்திலிருந்தே அளிக்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரேவித பாடங்களைப் போதிக்கும் ஒரே தகுதியுடைய. ஆசிரியர்களில் அனுபவமுள்ளவர்கள் குறைந்த ஊதியமும், புதியவர்கள் அதிக ஊதியமும் பெறும் விந்தை நிலவுகிறது. நான்கு வருட அனுபவமுள்ளவர் ரூ. 95-ம், ஒரு வருட அனுபவம்கூட இல்லாதவர் ரூ.-100-ம் பெறுகிறார்கள். ரூ.-85 - 5 - 125 - 10 - 175 என்ற சர்க்கார் விகிதப்படி ஊதியம் கொடுக்க நிதி இல்லை என்று கூறும் இந்நிர்வாகத்தினருக்கு இந்த அநீதி புரிய நிதி எங்கு இருந்து கிடைக்கிறது எனத் தெரியவில்லை.

தமிழகக் கல்வி இயக்குநராவது அல்லது உள்ளாட்சி மன்ற மேற்பார்வையாளராவது கவனித்து கழக ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அகற்றுவார்களா?

ஒரு ஆசிரியர்
பெரியகுளம்

விவசாய ரயத்துக்கள் மாநாடு

அதிகாரிகளுக்கு கழகத் தோழர் அறிவுரை

திருப்பத்தூர், ஜூன் 23—

இன்று வடார்க்காடு மாவட்டம்—திருப்பத்தூர் வட்டம் விவசாய ரயத்துக்கள் மாநாடு, திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தின் எதிரில், உதவி கலெக்டர் திரு. வேதநாராயணன் ஐ. ஏ. எஸ். தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில், வாணியம்பாடி—தி. மு. கழகச் செயலாளரும், திருப்பத்தூர் வட்ட விவசாயிகள் சங்க செயலாளருமான தோழர் வி. என். தத்தப்பன் அவர்கள் உரையாற்றினார்.

அவர் தனது உரையில், தமிழகம் சிறப்புடன் வாழ ஆட்சியாளர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை யென்றும், இன்றைய ஆட்சியில் உழவர்கள்—தொழிலாளர்கள் வாழ்வும் உயரவில்லை; துயரமும் தீரவில்லையென்றும், மேலும் தொழில் வளமும் பெருகவில்லை; பயிர் வளமும் பெருகவில்லையென்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ஐந்தாண்டு திட்ட அபிவிருத்திப் பற்றி நிறையப் பேசப் படுகிறதென்றும், ஆனால், 4 இலட்சம் மக்கள் வாழும் தங்கள் தாலுகாவில் ஒரு சிறிது முன்னேற்றம் கூட ஏற்படவில்லை யென்றும், புறம்போக்கு நிலங்களில் ஏழை—எளிய மக்கள் பயிரிட்டு வாழ்ந்தால் அதற்குக்கூட தண்டத்தீர்வை என்று வரிவசூலிப்பது கொடுமை யென்றும், இதை எடுத்துச் சொல்வோர் மீது அதிகாரிகள் கோபமடையக்கூடாதென்றும், கோபப்படுவது நீதியல்லவென்றும், அதிகாரிகளும் பொதுமக்களும் ஒன்றுபட்டு இருந்தால்தான் நாடு முன்னேறுமென்றும் கூறினார்.

மற்றும் பல அதிகாரிகளும், விவசாய ரயத்துக்களும் பேசியபின், இரண்டு உழவர்களுக்கு இரும்புக் கலப்பை பரிசு வழங்கப்பட்டு மாநாடு முடிவுற்றது.

வண்ணை தொகுதி தேர்தல் வழக்கு

விசாரிக்க நீதிபதி நியமனம்

சென்னை - வண்ணாரப்பேட்டை தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ. மாயாண்டி நாடாரின் தேர்தல் செல்லத் தக்கது அல்ல என்று நமது தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் சேர்தல் கமிஷன்முன் வழக்கு தொடுத்துள்ளார்.

இந்தத் தேர்தல் வழக்கினை விசாரணை செய்ய சென்னை 'ஸ்மால்காஸ்' நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜி. கே. தாமோதர ராவ் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கிராமங்களில் அமைக்க 10,000 வானொலிப் பெட்டிகள்

தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும்

சென்னை, ஜுன் 26—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் அமைப்பதற்காக சுமார் 10,000 வானொலிப் பெட்டிகள் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதன் மொத்த மதிப்பில் 50 - சத விகிதச் செலவை மத்திய அரசாங்கம் உதவித் தொகையாக தர முன்வந்துள்ளதாம்.

வானொலிகளை நிர்மாணிக்கும் பொறுப்பு, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை — மயிலாப்பூர் :
சித்திரகுளம் அருகில்
28—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : டி. தம்பிதுரை
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
முகவை-ஆர். எஸ். பாண்டியன்

★

குரவப்புலம் :
சத்திரத்திற்கு அருகில்
29—6—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : எஸ். வி. இராமாமிர்தம்
பேசுபவர் :
தில்லை-வில்லாளன்

★

மணக்குடி :
கூத்தர் சதுக்கத்தில்
29—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழக ஆண்டு விழா
தலைவர் : அ. சேவகாமூர்த்தி
பேசுவோர் :
அறிவுடைநம்பி
வை. சுப்பிரமணியம்

★

இலக்குமாங்குடி :
மரக்கடை சிவன் கோவிலுக்கு அருகில்
29—6—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : ப. நாராயணசாமி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
அ. நடராசன்
சபஸ்டீன்
(கூத்தாநல்லூர் வானொலிப் பாடகர் திரு. எ. எம். எ. ரகிம் அவர்கள் இயக்கப் பாடல்கள் பாடுவார்.)

குறிப்பு :—இலக்குமாங்குடி பஸ் நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்.

★

அண்ணங்காரம்பேட்டை
29—6—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழக 5-வது ஆண்டு விழா
தலைவர் : சு. பத்மநாபன்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
சா. ராமசாமி

★

வேலூர்— தோட்டப்பாளையம் :
(வ. ஆ. மாவட்டம்)
அருகந்தம்பூண்டி வீதியில்
29—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வி. எல். காந்தன்
பேசுவோர் :
கி. மனோகரன்
முகவை-ஆர். எஸ். பாண்டியன்

'வேலைநிறுத்தம் அவசியமில்லை'

மின்சார ஊழியர்களுக்கு அரசாங்கத்தின் கண்துடைப்பு

சென்னை, ஜுன் 26—

இலவச மின்சார விநியோகம், இலவச வீட்டு வசதி, இலவச உடுப்பு முதலியவைகளைக் கோரி மின்சார ஊழியர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம்' செய்ய முடிவு செய்துள்ளதை 'அவசியமற்ற' காரியம் என்று சென்னை அரசாங்கம் கருதுகிறது.

சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள மின்சார நிறுவன போர்டு, இவர்களின் கோரிக்கைகளைப் பற்றி ஆராய்ந்து ஆவன செய்யுமாம்.

அடையாளச் சின்னங்கள் அணிந்து பணியாற்றினர்

கோவை, ஜுன் 25—

பைகாரா, மேட்டூர், பாபநாசம் மின்சார அமைப்புகளில் பணியாற்றும் சுமார் 4,000 ஊழியர்கள் தங்கள் குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்துடனும், பொது மக்களின் அனுதாபத்தைப் பெறவும், அடையாள சின்னங்கள் அணிந்து இன்று பணியாற்றினர் என்றும், இந்த முயற்சி முழு வெற்றியைத் தந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார இலாகா கணக்கிடுவோர் சங்கம்

கோவை, ஜுன் 24—

சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 23—6—57 அன்று கோவையில் நடைபெற்றுள்ளது. பைகாரா, பாபநாசம், மேட்டூர், குந்தா, ஈரோடு, வேலூர், சென்னை, திருச்சி ஆகிய மின்சார நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சங்கத்திற்கு 'தமிழ் நாடு' மின்சார இலாகா கணக்கிடுவோர் சங்கம்; என்று பெயரிடப்பட்டு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மின்சார நிறுவன அமைப்பை வரவேற்றும், மின்சார ஊழியர்களின் குறைகளைக் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

6-மாதம் பெறுகின்றனர்!

திரைப் படத் தயாரிப்பு நிலைய ஊழியர்களுக்குப் 'போனஸ்'

சென்னை, ஜுன் 26—

கோவையிலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிலையமான 'பக்ஷி ராஜா ஸ்டுடியோ'வில் பணியாற்றும் ஊழியர்கள், தங்களுக்குத் தரப்படும் ஊதியம் போதவில்லை என்றும், மிகக் குறைவானது என்றும், தொழில் மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

படத் தயாரிப்பு, விநியோகம், நிறுவனத்தின் பாரமரிப்பு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கணக்கிடக்கூடாது என்றும், 'ஸ்டுடியோ'வைப் பொறுத்த வரையில் நஷ்டத்தில் நடைபெற்று வருகிறது என்றும் நிர்வாகிகள் சார்பில் வாதாடப்பட்டிருக்கிறது.

விசாரணைக்குப் பின், 1954 - 55-ம் ஆண்டுக்கு 'ஸ்டுடியோ' ஊழியர்களுக்கு, கிடைத்துள்ள மொத்த இலாபத்தில், 6 மாத அடிப்படை ஊதியம் வெகுமதியாகத் (போனஸ்) தரப்பட வேண்டும் என்று தொழில் மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

காஞ்சீபுரம் ஏழை மாணவர்களுக்கு இலவச பகல் உணவு

அண்ணா அவர்கள் மாதம் ஐம்பது ரூபாய் அளிப்பார்

முன்மாதிரியான உதவிக்கு நகர மன்றத்தின் நன்றி

காஞ்சி நகர மன்றப் பள்ளி, ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு இலவசமாக அளிக்கும் விழாவின்போது அண்ணா அவர்கள், 'இந்த நல்ல முயற்சிக்கு என்னுடைய பங்காக, நான் சட்டமன்ற உறுப்பினர் சம்பளமாகப் பெறும் தொகையிலிருந்து மாதம் ரூ. 50 அளிக்கிறேன்' என்று, கூடியிருந்த மக்களின் பெருமகிழ்ச்சிக்கும் பேராரவாரத்திற்குமிடையே அறிவித்தார்கள்.

ஏழை மாணவர் பகல் உணவு அளிப்புத் துவக்க விழா காஞ்சி சவுளிக்கடைச் சத்திரத்தில், 14-6-57-ல் நகரமன்றத் துணைத் தலைவர் அ. க. தங்கவேலர் தலைமையில் நடைபெற்றது.

மாநிலக் கல்வித் துறைத் தலைவர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தார்.

விழாவில் பேசிய அண்ணா அவர்கள், 'ஏழை மாணவர்கள் என்றும் பிறரை நம்பி வாழும் நிலை இருக்கக்கூடாது' என்பதை விளக்கிவிட்டு, 'மாணவர்களுக்கு உணவளிக்கும் இந்த நல்ல காரியத்திற்கு என் பங்காக மாதம் ரூ. 50 தருகிறேன்' என்று அறிவித்தார்கள்.

முடிவுரையில், தலைவர் அவர்கள், 'எதிர்பாராத வகையில் உதவியளிக்க முன்வந்த அண்ணா அவர்களைப் பாராட்டுவதாயும், உதவிக்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிப்பதாயும் கூறினர்.

(க. கி.)

மத்தியதர வகுப்பினருக்குக் கடன் உதவி!

பெண்களின் திருமணத்திற்காகத் தரவேண்டுமென யோசனை

கல்கத்தா, ஜுன் 26—

மத்தியதர வகுப்பினருக்கு, தங்கள் பெண்களின் மண விழாவிற்காக சர்க்கார் கடன் கொடுத்து உதவவேண்டும் என்று மேற்கு வங்க சட்டசபையில் பி. சோ. உறுப்பினர் ஒருவர் யோசனை கூறியிருக்கிறார்.

தாசரதி ராத் என்ற அந்த உறுப்பினர், கடந்த காலத்தில் சர்க்கார் பல காரியங்களுக்குக் கடன் வழங்கியிருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, பெரும் சிரிப்புக்கிடையே, 'இந்த திருமணக் கடன், சட்டசபை உறுப்பினர்களுக்கு முதன்முதலாகத் தரப்படலாம்,' என்றும் கூறினாராம்!

ஆளத் தகுதியுடையவர்கள் ஆப்பிரிக்கர்கள்!

நடைமுறையில் செயலாற்றும் பொறுப்புப்பற்றி கனா பிரதமர்

"தென்னாப்பிரிக்காவின் இதர பகுதிகளின் நன்மைகளைக் கருதி, 'ஆப்பிரிக்க மக்கள் தங்களுக்குள் திறம்பட ஆட்சி செலுத்திக் கொள்ள இயலும்,' என்பதை நடைமுறையில் செயலாற்றிக் காட்டும் பொறுப்பு கனா நாட்டிற்கு இருக்கிறது" என்று, சுதந்திரம் பெற்ற கனாவின் பிரதமர் லண்டனில் நடைபெற்ற உபசார விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

29—6—57 இரவு 7-30 மணிக்கு, கழகப் பணிமனையில் மேற்படி வட்ட கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது வருகைதரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அண்ணா சுற்றுப்பயணம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழர் தமிழராக வாழ வேண்டும்'

தாமல், ஜுன் 27—

22—6—57 காலை திரு. டி.எஸ் சின்னு அவர்கள் தலைமையில், திரு வரதக்குட்டி அவர்களின் மக்களுக்குக் காதணி விழாவும், பெயர் சூட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவின் சிறப்பைக் குறித்தும், குழந்தைகளை வாழ்த்தியும் தோழர் மா. கி. தசரதன் பேசினார்.

பின்னர் அண்ணா அவர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் புதுமை மலர வேண்டியதின் அவசியத்தை எடுத்து விளக்கி, 'தமிழர் தமிழராக வாழ வேண்டும்' என வலியுறுத்தி காதணி செய்துகொண்ட குழந்தைகளை வாழ்த்தி, ஓர் ஆண் மகவுக்கு 'அன்பழகன்' எனப் பெயர் சூட்டினர்.

பின்னர் சின்னசாமி(அய்யங்கார்) அவர்களும், உள்ளூர் மருத்துவரும் பேசினர்.

★

'ஒதுங்கியிருக்கும் நிலை கூடாது!'

பனப்பாக்கம், ஜுன் 27—

22—6—57 மாலை அண்ணா அவர்கள் இவ்வூரில் திருவள்ளுவர் இளைஞர் படிப்பகத்தைத் துவக்கிவைத்தார்.

படிப்பகத் துவக்க விழாவுக்குப் பின் தோழர் எஸ். ஆர். டி. எஸ் சந்திரன் அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பிற்பகல் 3 மணியிலிருந்தே பெருமழை பெய்துகொண்டிருந்தும் ஆர்வமுடன் மக்கள் குழுமி இருந்தனர்.

தோழர் மா. கி. தசரதன் அவர்கள் படிப்பகத்தின் தேவையை எடுத்துச் சொல்லி இங்கு துவங்கப்பட்ட படிப்பகம் நல்லமுறையில் பணியாற்றவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பின்னர் அண்ணா அவர்கள், படிப்பகத்தால் ஏற்படும் பலன்களை எடுத்துவிளக்கி, வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டியதின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, படிப்பகங்களில் எத்தகைய நூல்கள் இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்.

"இந்த விழாவில் நாங்கள் கலந்துகொள்கிறோம் என்பதற்காகச் சிலர் ஒதுங்கியிருக்கக் கூடாது. அவர்களும் இதில் பங்கு பெறுதல் வேண்டும்.

'எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு,'

என வள்ளுவர் கூறியுள்ளார். 'யார் யார் வாய்...' என்று இங்கே இருப்பது வெறும் அடுக்கல்ல—'யார், யார் வாய் வழி எச்செய்தியைப் பற்றிக் கேட்டாலும்,' என்றும் அது, கேட்போரையும் சொல்வோரையும் குறிக்கும்" என்றும் திருக்குறளுக்கு அரிய விளக்கம் அளித்தார்.

பலர் நூல் நிலையத்திற்குப் பரிசாக நூல்களை அண்ணா அவர்களிடம் தந்தனர்.

சேலம் தொகுதி வழக்கு நிதிக்காக விளாப்பாக்கம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 17—0—9 அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

★

வாலாஜாபாத்தில் வரவேற்பு

வாலாஜாபாத், ஜுலை 26—

23—6—57 மாலை இங்கு அண்ணா அவர்களைப் பாராட்டு முகத்தான் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அண்ணா வந்ததும் வெடிகளும், வாணங்களும் முழங்கின. நகரின் தெருக்களில் ஆங்காங்கே வரவேற்பு வளைவுகள் அழகுற மிளிர்ந்தன.

மலர்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில்சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற ஊர்வலம் ஊராட்சி அலுவலகத்தின் வாயிலைத் தொட்டதும் மக்கள் ஆரவாரமான வரவேற்பு நிகழ்த்தினர்.

ஊராட்சி மன்றத்தினரின் வரவேற்பைப் பெற்றுக்கொண்ட பின்னர் அண்ணா நன்றியுரை ஆற்றினர்.

தலைவர் தணிகாசலனார் நன்றி நவின்றார்.

பின்னர் நடைபெற்றமாபெரும் பொதுக்கூட்டத்தில் பலர் அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

திரு. கே. பெருமாள் அவர்கள் பேசியபின் தோழர் அரங்கண்ணல் அவர்கள் அண்ணாவின் தொண்டுகளை எடுத்துச் சொன்னார்.

பின்னர் தோழர் சி. வி. இராசகோபால் அவர்கள் பேசினார்.

அடுத்து, தோழர் மா. கி. தசரதன் கல்வித்துறையில் அண்ணா அவர்கள் ஆற்றிய தொண்டினை எடுத்துரைத்தார்.

இறுதியாக அண்ணா அவர்கள் பாராட்டுரைக்கும், வரவேற்புக்கும் நன்றி தெரிவித்து, தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கி சுமார் 1½ மணி நேரம் அரிய தோர் உரை ஆற்றினார்.

கூட்டத்திற்குத் திரு. இஸ்மாயில் அவர்கள் தலைமைதாங்கினார்.

நகரசபை அபிவிருத்தி வேலைகளுக்குக் கடன்!

ஆணையாளர் அறிவிப்பு

சென்னை, ஜுன் 26—

சென்னை நகரசபையுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வட்டங்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கான திட்டங்களை நிறைவேற்ற ரூ. 65,24,000 கடனாகப் பெறவேண்டுமென நகரசபையில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை நகரசபையும், சென்னை அரசாங்கமும் ஏற்க வேண்டும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

27—6—57 இரவு 8-30 மணிக்கு சென்னை—47-வது வட்டம், தெற்கு தியாகராயநகர்—தண்டபாணி தெரு, மதிவளர் மன்றத்தில், தோழர் தி. மா. திருநாவுக்கரசு தலைமையில் 'அரசும்—மக்களும்' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.